# ஜனவரி 1,2 நடப்பு நிகழ்வுகள்

**முக்கியமான நாட்கள்**

**ஜனவரி 1 - பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு [DRDO] தினம்**

- ஜனவரி 1, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு, டி.ஆர்.டீ.ஓ தினமாகக் கொண்டாடப்படுகிறது. டி.ஆர்.டீ.ஓ 1958 ல் பாதுகாப்பு துறையில் ஆராய்ச்சி வேலைகளை அதிகரிக்க 10 ஆய்வகங்களுடன் நிறுவப்பட்டது.

**தேசிய செய்திகள்**

**மகாராஷ்டிரா**

**கோரேகான் பீமா ஆண்டு விழா**

- மகாராஷ்டிராவில், புனேயின் வடகிழக்கு 30 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள கோரேகான் பீமா கிராமத்தில் பிரிட்டிஷ் மற்றும் பேஷ்வாக்களுக்கிடையே 1818 ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் வெற்றி பெற்றதன் நினைவாக ஜெய்ஸ்தம்பிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் விஜயம் செய்தனர்.

**சர்வதேச செய்திகள்**

**கத்தார் OPEC உறுப்பினர் கூட்டத்தில் இருந்து வெளியேறியது**

- பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகள் அமைப்புக் கூட்டத்தில் இருந்து வெளியேறியது. OPEC-ஐ விட்டு வெளியே செல்ல விரும்பும் விருப்பத்தை பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகள் அமைப்புக்கு தனது உத்தியோகபூர்வ அறிவிப்பை அனுப்பியுள்ளது, டிசம்பரில் அதன் திரவ இயற்கை எரிவாயு உற்பத்தியில் கவனம் செலுத்த திட்டம்.

**அமெரிக்கா, இஸ்ரேல் யுனெஸ்கோவை விட்டு வெளியேறியது**

- ஐக்கிய நாடுகள் மற்றும் இஸ்ரேல் அதிகாரப்பூர்வமாக ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பை (யுனெஸ்கோ) விட்டு 2018 ஆம் ஆண்டின் இறுதியில் வெளியேறியது.

**பாகிஸ்தான் இந்தியா அணுசக்தி நிறுவலின் பட்டியல் பரிமாற்றம்**

- இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அணுசக்தி நிறுவலுக்கு எதிரான தாக்குதல் தடை மீதான ஒப்பந்தத்தின் கீழ் அணுசக்தி நிறுவல்களின் பட்டியல் மற்றும் வசதிகளை பரிமாற்றம் செய்து கொண்டது.
- அணுசக்தி நிறுவல்கள் மற்றும் அணுசக்தி நிலையங்கள் ஆகியவற்றிற்கு இடையே உள்ள அணுசக்தி நிறுவலுக்கு எதிரான தாக்குதலை தடை செய்த ஒப்பந்தத்தின் கீழ், இந்திய மற்றும் பாகிஸ்தான் இரு நாட்டு சிறைகளில் உள்ள கைதிகள், மீனவர்களின் பட்டியலை பரிமாறிக் கொண்டனர்.

**அறிவியல் செய்திகள்**

**குளிர் அலை நிலைமைகள் பல மாநிலங்களில் தொடர்கின்றன**

- பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம், ஒடிசா, ஜம்மு&காஷ்மிர் மற்றும் தெலுங்கானா ஆகிய பகுதிகளில் குளிர் அலை நிலைமைகள் தொடர்கின்றன.

**வணிகம் & பொருளாதாரம்**

**23 பொருட்கள் மற்றும் சேவைகள் மலிவாகியது**

- பொருட்கள் மற்றும் சேவை வரி (GST) குறைக்கப்பட்டதால் திரைப்பட டிக்கெட், டி.வி, மானிட்டர் திரைகள் மற்றும் பவர் பேங்குகள் உட்பட இருபத்து மூன்று பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மலிவானதாகியது.

**விவசாயத்திற்கான கடன் வழங்கல் 57% அதிகரித்துள்ளது**

- கடந்த 4 ஆண்டுகளில் விவசாய கடன் வழங்கல் 57 சதவீதம் அதிகரித்து ரூ 11 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது என விவசாயத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**ஆர்.பி.ஐ எம்எஸ்எம்இ-களுக்கு நிவாரணம் வழங்கியுள்ளது**

- ரிசர்வ் வங்கி, ஏற்கனவே பணம் செலுத்தத் தவறிய நிறுவனங்களுக்கு ரூபாய் 25 கோடி வரையிலான கடனுக்கு ஒரு முறை மறுசீரமைப்பை அனுமதித்தது. ஆனால், அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் நிலையான சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**தேர்தல் பத்திரங்களின் ஏழாவது ஒப்பந்தத்தின் விற்பனை தொடங்குகிறது**

- தேர்தல் பத்திரங்களின் விற்பனை ஏழாவது முறை தொடங்கியது. இந்த மாதம் 10 ஆம் தேதி வரை தொடரும். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, எஸ்.பி.ஐ., 29 பிணைய அங்கீகார கிளைகள் மூலம் வாக்காளர் பத்திரங்களை வழங்குவதற்கும், பதிவு செய்வதற்கும் அங்கீகாரம் பெற்றது.

**எம்எஸ்எம்இ அமைச்சகம் ஏற்றுமதி மேம்பாட்டுக் கலையை நிறுவியது**

- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன (எம்எஸ்எம்இ) அமைச்சகம் எம்எஸ்எம்இக்காக ஒரு நிலையான சுற்றுச்சூழலை உருவாக்க ஒரு ஏற்றுமதி மேம்பாட்டு தனிப்பிரிவை நிறுவியது.

**பொதுத்துறை வங்கிகளில் கிட்டத்தட்ட ரூ 11,000 கோடி மூலதனத்தை அரசாங்கம் முதலீடு**

- யூகோ வங்கி மற்றும் சிண்டிகேட் வங்கி உட்பட நான்கு பொதுத்துறை வங்கிகளில் 10,882 கோடி ரூபாயை அரசு முதலீடு செய்துள்ளது.

**நியமனங்கள்**

- நீதிபதி டி பி என். ராதாகிருஷ்ணன் - **தெலுங்கானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி**
- இந்திய அமெரிக்கர் கே.பி. ஜார்ஜ் - **போர்ட் பெண்ட் கவுண்டி நீதிபதி**
- ஜெய்ர் போல்சொனாரோ - **பிரேசில் ஜனாதிபதி**
- சுதிர் பார்கவா - **தலைமைத் தகவல் ஆணையர்**

**திட்டங்கள்**

**சம்வத் [Samwad]**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் (இஸ்ரோ), அதன் திட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்களிடையே சம்வத்-ஐ [Samwad] அறிமுகப்படுத்தியது.
- இந்திய விண்வெளி நிறுவனம் இந்த திட்டத்தின் கீழ் விண்வெளி விஞ்ஞான நடவடிக்கைகளில் நாடு முழுவதும் இளைஞர்களை ஈடுபடுத்தும்.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU), ஒப்பந்தங்கள் & மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

**தமிழ்நாட்டிற்கு 1,146 கோடி ரூபாய் கூடுதல் நிதி உதவி அளிக்க மத்திய அரசு ஒப்புதல்**

- தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து கஜா புயலால் பாதித்த தமிழகத்திற்கு 1146 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் நிதி உதவி அளிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**ஆயுத சட்டத்தின் கீழ் உரிமம் தேவையில்லை**

- பாதுகாப்பு ஏரோஸ்பேஸ் மற்றும் போர்க்கப்பல்களின் பொருட்களை தயாரித்தல் இப்போது தொழில்துறை (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் வரும் ஆகையால் இனி வணிக மற்றும் தொழில்துறை அமைச்சகத்திலிருந்து எந்தவொரு உரிமம் பெற அவசியம் இல்லை என அறிவிப்பு.

**ஆதார், பிற சட்டங்கள் (சட்டதிருத்த மசோதா) 2018**

- 2018 ஆம் ஆண்டிற்கான ஆதார் மற்றும் பிற சட்டங்கள் (சட்டதிருத்த மசோதா) லோக் சபாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமைகள் பாதுகாப்பு) சட்ட மசோதா**

- முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமைகள் பாதுகாப்பு) சட்ட மசோதா இராஜ்ய சபாவில் தாக்கல் செய்யப்பட உள்ளது. சட்டம் மற்றும் நீதித்துறை மந்திரி ரவி ஷங்கர் பிரசாத் இந்த மசோதாவை அவையில் கொண்டு வருவார்.

**Join Us on FB:**

**For English – Examsdaily** **For Tamil – Examsdaily Tamil**

**For WhatsAPP Group - Click Here**